# செயற்சாதனை அறிக்கை
# 2008

இலங்கை புகையிரதத் திணைக்களம்

## முன் நோக்கு.

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்காகப் பல்வேறு வகையான போக்குவரத்து சாதனங்களிற்கு மத்தியில் நிதிச் சுயாதீனத்துடன் கூடியதுமான பயன்மிக்க புகையிரதப் போக்குவரத்து சேவையொன்றை வழங்கள்.

## சேவைகள்

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்காகப் பாதுகாப்பானதும் நம்பகரமானதும் குறிப்பிட்டுள்ள காலத்தில் சேவையில் ஈடுபடக் கூடிய கட்டமைப்பினையும் செயற்திறமை மிக்க புகையிரதப் போக்குவரத்து சேவை ஒன்றையும் வழங்குவோம்.

## குறிக்கோள்

- புகையிரத நேர அட்டவணையை பயணிகளின் தேவைகளுக்கு ஏற்ப வினைத்திறனான சேவைகளை வழங்குவற்காக சேவைகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.
- வீழ்ச்சியடைந்து வந்த சொத்துக்களின் வினைத்திறமையை தக்கவைப்பதற்காக புனர்நிர்மானமும் மறுசீரமைப்புச்செய்தல். (உ+ம். புகையிரத பாதை,சமிக்கை கட்டமைப்பு, புகையிரத அணி)
- புதிய சொத்துக்களுக்காக முதலீடுகள் செய்வதன் மூலம் சொத்துக்களின் அடித்தளத்தை வலுவடையச்செயதல். (அதிவேகத்தொடரூர்திகள், புகையிரத இயந்திரம், பெட்டிகள்)
- வருமான வழிமுறைகளை வலுவடையச்செய்தல்.
- அமைப்புக்களின் தாபன சட்டத்தை தற்காலிக சவால்களுக்கு ஏற்றவகையில் திருத்தி அமைத்தல்
- மனிதவள அபிவிருத்தி

## செயற்சாதனை –2008 ம் ஆண்டு

2007 ம் ஆண்டினுள் அடித்தளமிடப்பட்ட குறுகிய நடப்பு வழிமுறைகளை 2007 ம் ஆண்டினுள் மேலும் நடைமுறைப்பட்டது.

சேவைகளின் நண்பகத்தன்மைகளின் மட்டத்தை உயரத்துவதற்காக புதிய சொத்துக்களைப் பயன்படுத்துதல்.

- புதிய பெட்டிகள் 100 ஐ யும் அதிவேகத்தொடரூர்திகள் 15 ஐ யும் பராட்டுப்பெறும்வகையில் சேவையில் பயன்படுத்துதல்.
- பொருட்கள் போக்குவரத்துச்சேவை, மலை நாட்டுச்சேவை முன்னேற்றுவதை இலக்காகக்கொண்டு புதிய என்ஜின்கள் 15 ஐ பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- புதிய மின் சமிக்கை கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்கான கேள்விப்பத்திரக் கோரல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல
- வருமான உயர்வுக்காக பயணிகளின் பயணக்கட்டணங்களில் திருத்தியமைத்தலும், பருவச்சீட்டுக்களுக்கு வழங்கப்படும் ஆறுதல் விலைகளை நேரொத்ததாக திருத்தியமைத்தல்.
- செலவை கட்டுப்படுத்துவதற்காக மேலதிக கொடுப்பணவுகள் பற்றிய சிக்கல்களை தீர்க்கும் முறையொன்றை உரிய தாபனங்களுடன் பேசி அமைப்பதற்கு நடவடிக்கை செய்தல்.
- நிறுவன நிர்வாக சிக்கல்கள் தொடர்பாக உரையாடல்கள் மூலம் மிகவும் செயற்றினனான ஒழுங்கமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை செய்தல்.
- நிதி முகாமைத்துவ கேள்விப்பத்திரங்கள் கோரல் செயற்பாடுகளை தற்காலிக தேவைகளுக்கு ஏற்றவாறு தயாரித்தல்.
- 2008 ம் ஆண்டினுள் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதில் பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்தது.
- வருடாந்த புனர்நிர்மானப்பணிகள் சாதாரணபடி நிறைவுற்றதுடன் , பாதைகளின் வேகங்களை போதுமானளவு அகற்றிக்கொள்வதற்கும், சாதாரண புகையிரத வேகத்தை மணிக்கு கி.மீ. 40 வரை வைத்துக்கொள்வதற்கும்,என்ஜின்கள், பெட்டிகள், பொருட்கள் ஏற்றும் பெட்டிகளை போதுமானளவு எண்ணிக்கையை திருத்தியமைக்க முடிந்தது.
- சொத்து முகாமைத்துவம் தொடர்பாக கொள்கைகளை தயாரித்து தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.

2008 ம் ஆண்டினுள் அநேகமாக குறித்த வேளையில் கேள்விப்பத்திர கோரல் நடைமுறைகள் மூலம் பயணிகள் பெட்டிகள் 100 ஐ யும் அதிவேக தொடர்ரூதிகள்15 கிடைத்தமையும் அவைகளை சேவைகளில் பயன்படுத்தவும் முடிந்தது. இந்த புதிய சொத்துக்கள் பயணிகள் சேவைகளின் தன்மையை உயர்த்தக் காரணமாயிருந்தது.

1. பயணிகள் பெட்டிகளை மலைநாட்டுப் பாதைகளில்பயன்படுத்துகையில் தொழிநுட்ப சிக்கல்கள் காரணமாக மலைநாட்டுச்சேவையை உயர்த்த எதிர்பார்த்த மட்டத்தில் நடைபெறவில்லை. இருந்தும் அதிவேக தொடரூர்திகளை குறுகிய சேவைகளை வலுவடையக் செய்வதற்கும், அதேபோன்று தினசரி அலுவலக சேவைகளை மிகவும் திறனாக்குவற்கு உதவியது. தூர சேவைகளிள் புதிய பயணிகள் பெட்டிகளைப் பயன்படுத்தியதனால் அதை வலுவாக்க முடிந்தது.

2. புதிய புகையிரத என்ஜின்கள் 15 ஐ கொள்வனவு செய்தற்காக கேள்விப்பத்திரங்கள் கோரும் செயல்களில் தொழிநுட்ப சிக்கல்கள் தொடர்பாக தகவல்களும், அறிவுறுத்தல்களும் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலங்கள் எடுத்ததன் காரணமாக ஒரு வருடத்தினுள் முடிவு செய்ய முடியாமையினால் உத்தேசித்த என்ஜின்களைப் பெற்றுக்கொள்ள முடியாது போனது.

3. பகிஸ்தான் கடனுதவியின் கீழ் கொள்ளவனவு செய்யவிருந்த எரிபொருள் டாங்கிகள் 15 ஐ பெற்றுக்கொள்வதற்கு உலக சந்தையில் உருக்கின் விலை திடிரென கூடிக்குறைந்ததினால் கேள்விப்பத்திர நடவடிக்கைகள் தடைப்பட்டது.

4. புதிய மின் சமிக்கை கட்டமைப்பை கொள்வனவு செய்யும் திறந்த கேள்விப்பத்திர கோரல்களில் தகுதியான திட்டமெதுவும் இல்லாததால் நிராகரிக்க நேர்ந்தது.

5. பயணிகள் வருமானம் எதிர்பார்த்தளவில் அதிகரித்துக்கொள்வதற்கு முடியாமல் போனது. கட்டண அதிகரிப்பால் புகையிரத பயணிகளின் எண்ணிக்கை ஏனைய சாதனங்களின் மீது திரும்பிய காரணத்தினாலும் ஆகும்.

6. நிறுவன நிருவாகச்சட்டத்தை தற்காலிக தேவைகளுக்கு ஏற்றவாறு தயாரித்துக்கொள்வதற்கு உரிய பிரிவுகளுடன் செய்யப்பட்ட உரையாடல்களில் இறுதிப் பெறுபேறுகளை வருடத்தினுள் பெறமுடியாது போனதலால் இச்செயலை மேலும் கொண்டு செல்ல நேர்ந்தது.

2008 ம் ஆண்டுக்குரிய முன்னேற்றம் ஒவ்வொரு பிரிவுக்குரியவாறு கீழே காட்டப்பட்டுள்ளது.

## நிருவாகப்பிரிவு காரிய சாதனை

### ஆளணி நிருவாக நடவடிக்கைகள்

- நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்த பதவிகளில் 2455 ஐ நிரப்புவதற்கு நடவடிக்கை செய்தல்.
- நீண்ட காலமாக செயலிழந்திருந்த ஆட்சேர்ப்பு முறைகள் 10 ஐ தயாரித்து அனுமதிக்காக அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல்.
- புதவி உயர்வு நடவடிக்கைகளை செயற்படுத்துமுகமாக உரிய நேர்முக பரிட்சைகளையும், பரிட்சைகளையும் நடாத்தி வெற்றிடங்களை நிரப்புதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பாதுகாப்புபடையிலிருந்து ஓய்வுபெற்ற அனுபவமுள்ள உத்தியோகத்தர்களை பாதுகாப்புச் சேவையில் சேர்த்துக்கொள்ளல்.

### தொழிலாளர் தொடர்புகள்

தொழில் சங்கங்களுடன் அடிக்கடி பேர்ச்சுவார்த்தைகளை கட்டியெழுப்பி அதனூடாக அவசர சேவை நிறுத்தம், வேலை பகிஷ்கரிப்பு, நாச வேலைகள் போன்றவற்றை குறைவடையச் செய்தல். (03 சந்தர்ப்பங்களில் நடைபெற்ற வேலை பகிஷ்கரிப்புக்களில் இடர்வுகளின்றி சேவையை நடாத்த முடிந்தது.

இரத்மலான தொழிற்சாலையில் உற்பத்தியையும் முகாமைத்துவ தீர்மானங்கள் எடுக்கும்போது ஊழியர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கா ஊழியர் குழுவொன்று அமைக்கப்பட்டது.

**தாபன. நிருவாகச்சிக்கல்களை தீரக்கும் நடவடிக்கைகள்.**

அரச சேவையுடன் இணைந்த தாபன நிருவாகச்சிக்கல் தொடர்பாக உரிய தாபணங்களுடன் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்துதல்.

திணைக்களத்தை மீளமைப்புச் செய்வதற்கான திட்டமொன்றை சமர்ப்பித்தலும் நீதி உத்தியோகத்தர் பதவியொன்றை உருவாக்கி நீதி அலகு ஒன்றை அமைத்தல்.

**மக்கள் தொடர்புகள்**

புகையிரத சேவைப் பிரச்சினைகள், முன்நேற்றம், புதிய ஆலோசனைகள் தொடர்பாக 03 மாதங்களுக்கு ஒருதடைவ பத்திரிகையாளர் கலந்துரையாடலை நடத்துதல்.

புகையிரத குறுக்குப்பாதைகளின் முகாமைத்துவம், பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச உரிய பிரிவுகளை அறிவூட்டியமை.

மக்கள்களின் பிரச்சினைகள் தொடர்பாக தகவல்களை சமர்ப்பிப்பதற்காகப் புதன் கிழமை நாளில் நடைமுறைகளை ஒழுங்கமைத்தல்.

துார இடங்களிலிருந்து கொழும்பிற்கு வரும் பயணிகளின் இரவில் தங்குமிட வசதிற்காக "கொழும்புவீடு" என்ற பெயரில் வீடொன்றை கோட்டை புகையிரத நிலைய எல்லைக்ககுள் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**மனிதவள முகாமைத்துவம்.– ஜேர்மன் புகையிரத தொழினுட்ப பயிற்சி நிலையம்**

இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்னுட்ப பயிற்சி நிலையம் மூலம் 2008 ம் ஆண்டினுள் நடை பெற்ற முழு நேர கற்கை நெறிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் பற்றிய விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கற்கை நெறி | சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| மோட்டார் இயந்திர நிபுனர் | 18 |
| டீசல் என்ஜின் இயந்திர நிபுனர் | 23 |
| மின் இணைப்பாளர் | 24 |
| காய்ச்சியடித்து இணைப்பவர் | 23 |
| இயந்திர நிபுனர் (சாதாரன) | 19 |

2008 ம் ஆண்டினுள் முழு நேர கற்கை நெறிகளை நிறைவு செய்த மாணவர்கள் பற்றி கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்படுகிறது.

| கற்கை நெறி | குளு | எண்ணிக்கை |
|---|---|---|
| டீசல் என்ஜின் இயந்திர நிபுனர் | 2005 | 31 |
| மின் இணைப்பாளர் | 2004 | 13 |
| காய்ச்சியடித்து இணைப்பவர் | 2004 | 12 |
| இயந்திர நிபுனர் | 2004 | 09 |

2008 ம் ஆண்டினுள் முழு நேர கற்கை நெறிப் பயிற்சியைப்பெற்ற முழு மாணவர்களின் எண்ணிக்கை 309 ஆவதுடன் குறுகிய கால கற்கை நெறிப்பயிற்சியை பெற்ற முழு மாணவர்களின் எண்ணிக்கை 514 ஆகும். அதில் 41 நபர்கள் வெளி நிறுவனங்களிலிருந்து வந்த மாணவர்களாவதுடன் 473 நபர்கள் திணைக்கள அலுவலர்களாவர்.

## உள்ளகக் கணக்காய்வு

### உள்ளக

கிழ் காட்டப்படும் பிரிவுகளில் இந்த வருடத்தில் உள்ளக கணக்காய்வு இடம்பெற்றது.

| தொடர் இல. | இடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | புகையிரத நிலையங்கள் | 139 |
| 2. | உப புகையிரத நிலையங்கள் | 133 |
| 3. | மாவட்ட மின் சமிக்கை பரிசோதகர் அலுவலகங்கள் | 04 |
| 4. | இயந்திர மடுவங்கள் | 09 |
| 5. | நிரந்தர பாதை பரிசோதகர் அலுவலகங்கள் | 15 |
| 6. | கட்டிட பரிசோதகர் அலுவலகங்கள் | 05 |
| 7. | தொழிற்சாலைகள் | 03 |
| 8. | கணக்குக்கிழைகள் | 06 |
| 9. | நிருவாகப் பிரிவுகள் | 04 |
| 10. | புகையரத களஞ்சியங்கள் | 09 |

### கணக்காய்வு அதிகாரியின் கணக்கறிக்கை

| தொடர் இல. | கணக்கறிக்கை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | 2008.01.01 ம் திகதிக்கு விடையளிக்கவிருந்த கணக்காய்வுகள் | 18 |
| 02. | 2008 ம் ஆண்டினுள் கிடைத்த கணக்கறிக்கைகள் | 67 |
| 03. | 2007 ம் ஆண்டில் முடிப்பதற்கு இருந்த கணக்கறிக்கைகள் | 85 |
| 04. | 2008 ம் ஆண்டினுள் விடையழிக்கப்பட்ட கணக்கறிக்கைகள் | 57 |
| 05. | 2008.12.31 ம் திகதியில் விடையளிக்கவிருந்த கணக்கறிக்கைகள் | 28 |

### இயக்குநர் பிரிவு காரிய சாதனைகள்

புகையிரத சேவையை உயர்த்தும் நோக்குடன் கீழ் காணப்படும் நடைமுறைகள் 2008 ம் ஆண்டினுள் நடைபெற்றது.

- பல வருடங்களாக இரத்துச்செய்யப்பட்டிருந்த கீழ் குறிப்பிடப்படும் புகையிரத சேவைகளை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தியமை.
  - * களனிவெளி பாதையில் காலை மாலையில் இரு முறை பயனங்கள்.
  - * நாவலபிட்டி/ஹட்டன் இடையில் இருமுறை பயனங்கள்.
  - * நாவலபிட்டி/ கலபொட இடையில் இருமுறை பயனங்கள்.
  - * பிரதான பாதையில் கொழும்பு/ வேயன்கொடை இடையில் இருமுறை பயனங்கள்.
- கொழும்பு / நானுஓய புதிய நகர புகையிரத்தை அறிமுகப்படுதியமை.
- நாவலபிட்டி, மாத்தளையில் இருந்து கொழும்புக்கு நேரடி புகையிரத வசதியை அறிமுகப்படுத்தியமை.
- புதிய அதிவேக தொடரூர்திகளினால் குறுகிய சேவைகளின் நம்பகத்தன்மையை கட்டியெழுப்பியமை.
- புதிய சீன பெட்டிகளை அறிமுகப்படுத்தி யாழ்தேவி, ருஹுணு குமாரி, முதுகுமாரி,சாகரிகா போன்ற 7புகையிரதங்களின் (14 முறை பயனங்கள்) பிரயாணிகளின் வசதிகளின் தன்மையைஉயர்த்துதல்.

- பி.ப. 04.30 மணிக்குப் பிறகு கடமை முடிந்து பிரதான பாதை, களணிவெளி, புத்தளம் பாதைகளில் பிரயாணம் செய்ய இரத்மலானையிலிருந்து புறப்படும் பயணிகளுக்காக புதிய புகையிரதமொன்றை அறிமுகப்படுத்திமை.
- பயணிகளின் தேவைகளுக்கேற்றவாறு புகையரத நேரஅட்டவணையை திருத்துதல்.
- வலதுகுறைந்த பயணிகளுக்கான வசதிகளை தேர்ந்தெடுத்த புகையிரத நிலையங்களிள் அமைத்தல் (உ+ம். மட்டக்களப்பு, மரதானை)



மரதானை புகையிரத நிலையத்தில் வலதுகுறைந்த பயணிகளுக்கான மின் சோபாவை மக்களுக்காக ஒப்படைத்த போது



நுானுஓய புதிய நகரங்களுக்கிடையிலான புகையிதம் தனது கன்னிப்பயனம் நானுஓயா வரையான பயணத்தில்

**தடம்புரளுதல்**

| விபரம் | 2007 | 2008 |
|---|---|---|
| ஓடு பாதையில் | 62 | 60 |
| முற்றம் | 119 | 104 |
| **மொத்தம்** | **181** | **164** |

2006 ம் ஆண்டினுள் 228 ஆகிய புகையிரத தடம்புரளுதல்கள் 2007 ம் ஆண்டில் 203 ஆகவும் 2008 ம் ஆண்டில் 164 வரை குறைக்க முடிந்தது.

**புகையிரத விபத்துக்கள்**

| விபரம் | 2007 | 2008 |
|---|---|---|
| புகையிரத மோதல்கள் | 07 | 09 |
| ஏனைய விபத்துக்கள் | 07 | 24 |
| குறுக்குப்பாதைகளில் மோட்டார் வாகன மோதல்கள் | 65 | 43 |
| மோட்டார் வாகனங்களினால் குறுக்குப்பாதை தடைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் | 263 | 207 |
| தீ விபத்துக்கள் | - | 01 |
| பயங்கரவாத் தாக்குதல்கள் | 01 | 06 |

புகையிரத குறுக்குப் பாதைகளில் இடம் பெறும் மோதல் உட்பட ஏனைய அவசர விபத்துக்களின் எண்ணிக்கை 2007 ம் ஆண்டில் 343 ஆனதுடன் 2008 ம் ஆண்டில் 290 வரை குறைக்க முடிந்தது.

**காலத்துக்குகந்த இயக்கம்**

| விபரம் | உத்தேசித்த புகையிரத எண்ணிக்கை | நடைபெற்ற புகையிரத எண்ணிக்கை | உரிய நேரத்திற்கு நடைபெற்ற புகையிரத எண்ணிக்கை | தாமதித்து நடைபெற்றவை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நி.மி. 06–10 | நி.மி. 11–30 | நி.மி. 31–60 | நி.மி. 60 க்கு மேல் |
| **1. பிரதேச** | **27,876** | **27,625** | **3,518** | **3,341** | **9,535** | **6,045** | **5,186** |
| குறுகிய | 30,052 | 25,639 | 5,297 | 2,552 | 8,372 | 4,899 | 4,519 |
| தூர/ நகர | 69,456 | 63,885 | 21,579 | 9,313 | 23,612 | 7,531 | 1,850 |
| **பிரயாணிகள்** | **127,384** | **117,149** | **30,394** | **15,206** | **41,519** | **18,475** | **11,555** |
| **11.பொருள்** | **8,071** | **5,756** | **683** | **76** | **452** | **637** | **3,908** |
| **மொத்தம்** | **135,455** | **122,905** | **31,077** | **15,282** | **41,971** | **19,112** | **15,463** |

இந்த வருடத்தினுள் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களையும், பாதுகாப்புச் சட்டதிட்டங்களையும் பின்பற்றிய சூழ்நிலையிலும் புகையிரதங்களை உரிய நேரத்திற்கு நடைபெறச்செய்த சதவீதத்தை 30% என்ற மட்டத்தில் வைத்துக்கொள்ள முடிந்தது.

2008 ம் ஆண்டினுள் நடைபெற்ற புகையிரதங்களின் எண்ணிக்கை 122905 ஆனதுடன் சரியான நேரத்திற்கு நடைபெற்ற புகையிரதங்களின் 31077 ஆகும். தாமதித்து நடைபெற்றவை 91828 ஆகும்.

**புகையிரத கிலோ மீற்றர் அளவு**

| விபரம் | அதிவேகத் தொடர் நடைபெற்றவை | அதிவேகத் தொடர் இரத்துச் செய்யப்பட்டவை | டீசல் புகையிரதம் நடைபெற்றவை | டீசல் புகையிரதம் இரத்துச்செய்யப் பட்டவை | நடைபெற்ற மொத்த எண்ணிக்கை | இரத்துச் செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| **1.பயணிகள்** | **2,647,669** | **95,966** | **5,752,163** | **263,934** | **8.399.832** | **359.900** |
| தூர/ நகரங்களுக்கு | 0 | 0 | 3,216,657 | 32,796 | 3,216,657 | 32.796 |
| பிரதேச | 75,123 | 13,814 | 1,445,958 | 164,612 | 1,521,081 | 178.426 |
| குறுகிய | 2,572,546 | 82,152 | 1,089,548 | 66,526 | 3,662,094 | 148.678 |
| **11. பொருள்** | 0 | 0 | 310,892 | 156,694 | 310,892 | 156.694 |
| **111. வெற்றுப் புகையிரதம்** | **19,837** | **0** | **80,495** | **0** | **100,332** | **0** |
| 1V.**இலகுவன என்ஜின்** | **0** | **0** | **56,714** | **0** | **56,714** | **0** |
| **மொத்தம்** | **2,667,506** | **95,966** | **6,200,264** | **420,628** | **8,867,770** | **516.594** |

**விசேட புகையிரத கிலோ மீற்றர்**

| விபரம் | பயணிகள், பொருட்களுடன் கூடிய டீசல் புகையிரதம் | பயணிகள், பொருட்களற்ற டீசல் புகையிரதம் | பயணிகள், பொருட்களுடன் கூடிய நீராவி புகையிரதம் | பயணிகள், பொருட்களற்ற நீராவி புகையிரதம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| விசேட பயணிகள் புகையிரதம் | 85,455 | 0 | 0 | 0 | 85,455 |
| விசேட பொருட்கள் புகையிரதம் | 17,578 | 1,779 | 0 | 0 | 19,357 |
| சேவை புகையிரதம் | 81,164 | 2,679 | 0 | 0 | 83,843 |
| ஹிதாஜி | 14,757 | 1,776 | 0 | 0 | 16,533 |
| ருவறிஸ்ற்கார் | 2,842 | 0 | 0 | 0 | 2,842 |
| டீசல் டிலுயுக்ஸ் | 928 | 0 | 0 | 0 | 928 |
| வைஸ்றோய் | 4,055 | 279 | 1,805 | 157 | 6,296 |
| வெலஸ்ட் | 4,512 | 0 | 0 | 0 | 4,512 |
| மோட்டார் ரொளி | 18,493 | 2,731 | 0 | 0 | 21,224 |
| சுண்ணாம் புக்கற்கள் | 55,275 | 55,275 | 0 | 0 | 110,550 |
| றேல்பஸ் | 59,496 | 1,120 | 0 | 0 | 60,616 |
| விறேக் டவுன் | 857 | 31 | 0 | 0 | 888 |
| **மொத்தம்** | 345,412 | 65,670 | 1,805 | 157 | 413,044 |

## புகையிரத அணி

### பயணிகள் பெட்டிகள்

பயணிகளுக்கு தரமான சேவையை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் பயணிகள் பெட்டிகள் 100 ஐ சேவையில் இணைத்து யாழ்தேவி, றுகுணு குமாரி,முதுகுமாரி, மஹவ,பொல்கஹவெல, புத்தளம் போன்ற புகையிரதங்களுக்காக இந்த பெட்டிகள் பயன்படுத்தப்பட்டது. இப்பொழுது அந்த பெட்டிகளில் 80% சதவீதமானவை மட்டும் சேவையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.



சேதமடைந்த புகையிரத பயணிகள் பெட்டியொன்று திருத்தியமைப்பதற்கு முன்பும் பின்பும்.

### அதிவேகத்தொடர்ரூதிகள்

கொழும்மை அண்மிய சேவைகளை வலுப்படுத்துவதற்காக இவ்வருடத்தினுள் அதிவேகத்தொடர்ரூதிகள் 15 ஐ கொள்வனவு செய்து அதில் 07 ஐ இப்பொழுது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதே போல் அதிவேக தொடரூர்திகளை அறிமுகப்படுத்தியதனால் அண்மித்த(குறுகிய) சேவைகளுக்காக பயன்படுத்திய என்ஜின்கள் சிலவற்றை அகற்றி துார பயணிகள், பொருட்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டது. மேலும் களணிவெளிப் பாதையில் இரு முறை புகையிரத பயணம் உட்பட இரத்துச்செய்யப்பட்டிருந்த புகையிதை பயணம் 06 அளவில் மீணடும் சேவையில் பயன்படுத்தப்பட்டது. பெட்டிகள் 15 ஐ திருத்தியமைத்து சேவையில் பயன்படுத்தப்பட்டது. புதிய பெட்டிகளை புனர்நிர்மானம் செய்யும் தொழிற்சாலையொன்று அமைக்கப்பட்டது. இதன் வேலைகள் நிறைவடைந்துள்ளதுடன் கோரப்பட்ட இயந்திரங்களில் சியரின் மெசின் கிடைக்கப்பெற்றுள்ளது. ஏனைய இயந்திரங்கள் கோரப்பட்டுள்ளது. இதனால் வினைத்திறனுடனான தரமான சேவையை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.




சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப பட்ட S 10 அதிவேக தொடர்ரூதி பயனித்த வேளை.

### புகையிரத என்ஜின்கள்.

இப்பொழுது புகையிரத திணைக்களத்தில் என்ஜின்கள் 98 அளவில் இருப்பதுடன் அதில் பயன்படுத்தக்கூடியது 59 ஆகும். இது 75% சதவீதமானவை ஆயுட்காலத்தைக் கடந்த என்ஜின்களாகும். இந்த என்ஜின்களின் அணியை (கட்டமைப்பை) வலுவடையச்செய்ய இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பழுதடைந்துள்ள என்ஜின்களினுள் திருத்தியமைக்கப்பட்ட M 5 இன என்ஜின்கள் இரண்டை இப்பொழுது மலைநாட்டு பாதையில் சேவைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. M6, M7 என்ஜின்களை திருத்தியமைக்கும் பணிகள் வேலைத்தளத்தில் நடைபெறுகிறது. மேலும் என்ஜின்கள் 15 கொள்வனவு செய்வதில் சில தொழிநுட்ப கோளாறுகள் தொடர்பான முடிவுகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதினால் கேள்விப்பத்திர கோரல் சபையின் சிபாரிசு வருடம் முடிவடையும் வரை கிடைக்கவில்லை. சுனாமியினால் சேதமடைந்த M2-591 என்ஜினை மறுசீரமைத்து மீண்டும் புயைகயிரத சேவையில் இணைக்கப்பட்டது.



மறுசீரமைக்கப்பட்ட M5 என்ஜின்.



சுனாமியினால் சேதமடைந்த M2 என்ஜின் மறுசீரமைக்கப்பட்ட பின்னர்.

**பாகிஸ்தானிடமிருந்து என்நெய் தாங்கிகளை கொள்வனவு செய்தல்**

உலக சந்தையில் உருக்கின் விலை கூடிக்குறைவடைவதனால் வழங்கக்கூடிய அளவு அடிக்கடி மாற்றமடைந்ததினால் கொண்டுவர முடியாமல் போனது.

**என்ஜின் பொருட்கள் பெட்டி பயணிகள் பெட்டி மேற்பார்வை**

| விபரம் | உத்தேசம் | நிறைவு செய்த வளர்ச்சி |
|---|---|---|
| **என்ஜின், அதிவேகத்தொடர்களைத் திருத்தியமைத்தல்** | | |
| துணைப்பதிவு செய்யப்பட்ட திருத்தங்கள் | 58 | 45 |
| இலகுவான திருத்தங்கள் | 460 | 541 |
| **பெட்டிகளைத் திருத்தியமைத்தல்கள்** | | |
| துணைப்பதிவு செய்யப்பட்ட திருத்தங்கள் | 295 | 207 |
| இலகுவான திருத்தங்கள் | 60 | 53 |
| **பொருட்கள் பெட்டிகள் திருத்தங்கள்** | | |
| துணைப்பதிவு செய்யப்பட்ட திருத்தங்கள் | 160 | 145 |
| இலகுவான திருத்தங்கள் | 940 | 575 |

## இயக்க வலு வழங்கள்

### இயக்க வலு அடிப்படைத் தேவைகள்

ரூ. 120 மில்லியன் செலவில் கொழும்பு இயந்திர மடுவம் நவீனப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.



கொழும்பு இயந்திர மடுவம் நவீன படுத்தப்படுகின்ற வேளை.

புகையிரத என்ஜின் இடர்கள் 2007 ம் ஆண்டில் 707 ஆனதுடன் அது 2008 இல் 590 வரை குறைக்க முடிந்தது.

## சாதாரன தினசரி இயக்க வலு வழங்கள்

### டீசல், நீர்மின் புகையிரத என்ஜின்

| விபரம் | W1 | W2 | W3 | Y | S5 |
|---|---|---|---|---|---|
| பராமரிப்பிலுள்ள எண்ணிக்கை | 2 | 2 | 10 | 24 | 3 |
| சேவைக்குத்தேவையான எண்ணிக்கை | 4 | 0 | 08 | 20 | 2 |
| சேவைக்கு கிடைத்த எண்ணிக்கை | 1 | 1 | 07 | 20 | 1 |

### டீசல் மின் என்ஜின்

| விபரம் | M2 | M4 | M5 | M5A | M5B | M5C | M6 | M7 | M8 | M8A | M9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பராமரிப்பிலுள்ள எண்ணிக்கை | 13 | 14 | 0 | 0 | 4 | 5 | 14 | 15 | 8 | 2 | 10 |
| சேவைக்குத் தேவையான எண்ணிக்கை | 10 | 10 | 0 | 0 | 3 | 4 | 11 | 11 | 6 | 1 | 4 |
| சேவைக்கு கிடைத்த எண்ணிக்கை | 9 | 9 | 0 | 0 | 2 | 3 | 8 | 10 | 5 | 1 | 3 |

### அதிவேகத்தொடர்ரூதிகள்

| விபரம் | S3 | S6 | S7 | S8 | S9 | S10 |
|---|---|---|---|---|---|---|
| பராமரிப்பிலுள்ள எண்ணிக்கை | 0 | 4 | 6 | 20 | 15 | 4 |
| சேவைக்குத்தேவையான எண்ணிக்கை | 0 | 2 | 4 | 17 | 13 | 4 |
| சேவைக்கு கிடைத்த எண்ணிக்கை | 0 | 1 | 1 | 15 | 12 | 4 |

## அடிப்படை வசதிகள்

### புகையிரத பாதை அபிவிருத்தி

புகையிரத பாதை புனர்நிர்மானத்தின் கீழ் வேக எல்லையை அகற்றுவதற்காக திருத்த வேலைகள் செய்யப்பட்டது. அதற்காக 96* 66 றேல் 1874 உம் 45"S/H றேல் 1,406 உம், மர சில்பர் கட்டைகள் 97,882 உம், கொங்றீற் சில்பர் கட்டைகள் 48,003 உம், வெலெஸ்ற் கியூப் 21,719 ம் இவ்வாண்டினுள் பரப்பப்பட்டது.

### பாதை பராமரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள்

| பொருட்டள் | எண்ணிக்கை |
|---|---|
| தண்டவாளங்கள் (90' 66) | 1,874 |
| தண்டவாளங்கள் (45'S/H) | 1,406 |
| மர சில்பர் கட்டைகள் | 95,752 |
| கொங்றீற் சில்பர் கட்டைகள் | 48,003 |
| பெலெஸ்ற் (கியூப்) | 21,719 |
| சேவை புகையிரதம் | 397 |

பாதைக்கட்டமைபின் தரத்தை உயர்த்துவதற்கான நோக்கத்துடன் கீழ் காட்டப்படும் செயல்கள் இக்காலத்தில் செய்யப்பட்டது.

- சாதாரண புகையிரத வேகத்தை மணிக்கு 53 இருந்து 59 வரை அதிகரித்தல்.
- அநுராதபுரம்/ கொழும்பு புகையிரத பயண நேரத்தை 3 ½ மணி வரை குறைக்க கூடியதாக பாதையை அமைத்தல்.
- மட்டக்களப்பு / கொழும்பு பயண நேரத்தை ½ மணித்தியாலத்தால் குறைத்தல்.
- களுத்தறை தெற்கு வரையிலான இரட்டைப் பாதையை முடித்தல்.
- பாதை பராமரிப்பை அரை இயந்திரமயமாக்கலுக்காக புதிய 'ரேம்பின் மெசினை இறக்குமதி செய்து பாதை பராமரிப்புக்காக பயன்படுத்திக்கொள்ளல்.
- வருடாந்த கொங்றீற் சில்பர் கட்டை உற்பத்திப் பிரிவின் கொள்ளளவை 50,000 இருந்து 70,000 வரை அதிகரித்தல். கண்டி/பேராதெனிய /கடுகண்ணாவ புகையிரத முக்கோண அபிவிருத்தியின் மூலம் கண்டி கொழும்பு புகையிரத பயண நேரத்தை குறைத்தல்.



களுத்தறை தெற்கு வரை புகையிரத இரட்டை பாதையாக்கல்.



டெம்பின் மெசின் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முன்.

கரையோர புகையிரத பாதையை முன்நேற்றுவதற்காக இந்தியாவின் கடனுதவின் கீழ் கொழும்பு - காலி இடையிலிலான பயண நேரத்தை 02 மணி வரை குறைக்கும் நோக்குடன் 2008 ம் ஆண்டு 08 ம் திகதி இருசாரார்களுக்குமிடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தும், கடன் உதவித்தொகை மில்லியன் 100 வரை மட்டுப்படுத்தப்பட்டதனால் குறித்த வேலைத்திட்டங்களில் மாற்றம் செய்ய நேர்ந்தது.

வட புகையிரத பாதை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பொல்கஹவெல- அநுராதபுரம் புகையிரதப் பாதையை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் தற்பொழுது பொல்கஹவெல இருந்து மகவ வரை புனரமைக்கப்பட்டுள்ளது. அதன்படி வேக எல்லையை குறைத்ததினால் பயண நேத்தை குறைக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரையான நேரத்தை 03 மணி ஆல் குறைப்பது இதன் நோக்காகும்.

ரம்புக்கனை - பதுளை புகையிரதப் பாதை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பாதையில் பலவீனமான இடங்களை புனரமைப்புச்செய்வதற்கு உருக்கு சில்பர் கட்டைகளை பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மர சில்பர் 32,811 உம் கொங்றீற் சில்பர் 4,910 உம் பெலெஸ்ற் கியூப் 736 உம் பரப்பப்பட்டது. உருக்கு சில்பர் 5,000 தருவித்தல் கட்டளை செய்யப்பட்டுள்ளதுடன் 1,500 ஐ பாதையில் பரப்பி பரீட்ச்சித்துப் பார்க்க நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது.

றாகம - புத்தளம் பாதையில் றாகமயிலிருந்து ஜாஎல வரையிலான புகையிரத பாதையை இரு பாதைகளாக்கப்பட்டுள்ளது. வேக எல்லையை படிப்படியாக அகற்றுவதன் மூலம் புகையிரதப் பயண நேரத்தைக் குறைப்பது நோக்கமாகும்.

கடுகண்ணாவ – பேராதெனிய - கண்டி புகையிரத முக்கோணத்தை முன்நேற்றுவதன் கீழ் கொழும்பு - கண்டி பயண நேரத்தை ½ மணித்தியாலத்தினால் குறைப்பது இதன் நோக்கமாகும். பேராதெனிய புகையிரத நிலையத்தையும் புதிய பயணிகள் மேடையையும் இணைக்கும் ‘மறுபடி இணைக்கும் கிளைப்பாதை’ (Loop line) பாதையின் வேலைகள் நிறைவடைந்துள்ளது. பிலிமத்தலாவயிலிருந்து கெலிஓய வரை ‘லூப்‘ பாதையை அமைக்கும் வேலைகள் நடைபெறுகிறது.

**பராமரிப்பு வேலைகள்**

| விபரம் | மணிக்கு கி.மீ.10 க்கு கீழ் | மணிக்கு கி.மீ.10 க்கு மேல் |
|---|---|---|
| 2008.01.01 ல் இருந்த வேக எல்லைகளின் எண்ணிக்கை | 86 | 747 |
| 2008 ம் ஆண்டடில் அகற்றப்பட்ட வேக எல்லைகளின் எண்ணிக்கை | 86 | 396 |
| 2008 ம் ஆண்டில் புதிதாக சேர்க்பட்ட வேக எல்லைகளின் எண்ணிக்கை | 85 | 376 |
| 2009.01.01 ல் இருந்த வேக எல்லைகளின் எண்ணிக்கை | 85 | 727 |

**பாலங்கள்**

மிதிகம, உணவடுன, பெந்தொட்ட பழைய பாலங்கள் 03 ஐ அகற்றி புதிய பாலங்கள் 03 ஐ கொள்வனவு செய்து அவைகளை அமைத்ததுடன் நில்வளவை பாலத்தை புதிதாக அமைத்தல், கதலுவ பாலத்தின் நிர்மானப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதற்காக மந்திரிகள் சபை அனுமதி கிடைத்தும் (SEMA) நிறுவனத்தின் சிபார்சினால் விளங்கிக்கொள்வதற்கு காலம் எடுத்தது.

அதேபோல் கீழ் காட்டப்படும் பாலங்களை புனர்நிர்மானம் செய்ததும் 2008 ம் ஆண்டினுள் செய்யப்பட்டது.

- பொல்வத்துமோதர, மிதிகம, ஒறுகொடவத்த, ஜாஎல பாலங்களை பொருத்துதல்.
- அம்பேவெல பாலத்தை புனர்நிர்மானம் செய்தல்.

- மலைநாடு பிரதான புகையிரத பாதையில் பாலங்களின் மேலுள்ள பாதையை வலுவடைய செய்தலும், பாலத்தின் மேலுள்ள வளைவுகளில் புகையிரதம் இலகுவாக செல்வதற்காக பாலத்தின் கீழ் பரப்பப்பட்டிருந்த மரங்களை அகற்றி உருக்கு போடப்பட்டது.
- நாகொள்ளாகம, பேராதெனிய பயணிகள் பாலங்களை அமைத்தல்.
- பயங்கரவாத தாக்குதலினால் சேதமடைந்த கடுகஸ்தொட்ட பாலத்தை புனர்நிர்மானம் செய்து பாவனைக்கு விடல்.
- ஹிக்கடுவ பாலத்தின் மேல் இடம்பெற்ற விபத்தின் பின் ஆபத்துக்குள்ளான பாலத்தை புனர்நிர்மானம் செய்து பாவனைக்கு வழங்கியமை.




அம்பேவெல பாலத்தை மறுசீரமைத்ததன் பின்னர் தோன்றும் காட்சி.



ஜாஎல பாலத்தை மறுசீரமைத்துக்கொண்டிருக்கும் போது எடுக்கப்பட்ட புகைப்படமாகும்.



பேராதெனிய பயணிகள் பாலம்.



நில்வளைவை பாலம்.

**கட்டிடங்களை மறுசீரமைப்புச் செய்தல்**

புகையிரத நிலையங்கள் 40 யையும், உத்தியோக இல்லங்கள் 56 யையும், தொழிற்சாலைக் கட்டிடங்கள் 8 யையும், வேறு கட்டிடங்கள் அமைப்புக்கள் 55 யையும் மறுசீரமைப்பு செய்தல் 2008 ம் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டது.

**புதிய பாதைகள் அமைத்தல்**

புதிய பாதைகள் அமைத்தலின் கீழ் களுத்தறை வடக்கிலிருந்து களுத்தறை தெற்கு வரையிலான 2 கி.மீ. நிர்மானப்பணிகள் நடைபெற்றது.

## சமிக்கை கட்டமைப்பு

புகையிரத திணைக்களத்திடம் இருக்கும் சமிக்கை கட்டமைப்புக்களிள் பழைய முறைகளை பின்பற்றுவதனால் சமிக்கை கோளாறுகளிள் அதிகரிப்பை இவ்வருடத்தினுள் காண முடியும். அதன்படி நாளாந்த சாதாரண சமிக்கை கோளாறுகளின் எண்ணிக்கை 2007 ம் ஆண்டில் 06 ஆனதுடன் அது 2008 ம் ஆண்டில் 08 வரை அதிகரித்துள்ளது. இதற்காக கேள்விப்பத்திர சபைகள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1. மரதானை- வாத்துவ வரை மத்திய சமிக்கை கட்டமைப்பு (CTC) க்கு பதிலாக புதிய கட்டமைப்பொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதற்காக கேள்விப்பத்திர சபைகளின் முடிவுகளிள் தாமதம்.


2. மின் சமிக்கை கட்டமைப்பு
   இதற்காக கிடைத்த ஆலோசனைகள் இரண்டும் நிராகரிக்கப்பட்டன.

**சமிக்கை கோளாறுகளின் எண்ணிக்கை**

| மாவட்டம் | 2007ம் வருடம் | 2008ம் வருடம் |
|---|---|---|
| மத்திய மாவட்டம் | 724 | 1177 |
| கீழ் மாவட்டம் | 553 | 682 |
| வடக்கு மாவட்டம் | 334 | 299 |
| மேல் மாவட்டம் | 521 | 648 |
| **மொத்தம்** | **2,132** | **2,806** |
| அண்ணளவான கோளாறுகள் (ஒரு நாளைக்கு) | 6 | 8 |

சமிக்கை கட்டமைபொன்றை அமைத்தல் (மூன்றாம் பாதை கண்டி பேராதெனிய), பேராதெனிய புகையிரத நிலையத்தை வர்ண சமிக்கை அமைப்பாக மாற்றுதலும் பேராதெனிய கண்டிக்கு இடையில் வர்ண சமிக்கையமைப்பை அமைத்தல்.

கண்டி/பேராதெனிய இடையில் ஸ்தாபிக்கப்பட்ட வர்ண சமிக்கை கட்டமைப்பு.




20 வருடங்கள் பழமையான மின் சமிக்கை கட்டமைப்புக்குப பதிலாக புதிய கட்டமைப்பொன்றை அமைத்தல். இது இரு முறைகளின் கீழ் நடைபெறும்.

- அவசர தேவைகளுக்காக செயலற்று இருக்கும் பழைய கட்டமைப்பை திருத்தியமைத்தல்.
- பழைய கட்டமைப்புக்குப் பதிலாக புதிய கட்டமைப்பொன்றை அமைத்தல்.

இதுவரை பல்லேவெல வரை நீட்டப்பட்டிருந்த ஒருமுகப்படுத்திய (C/L) சமிக்கை கட்டமைப்பை ரமுக்கண வரை நீடித்தல். இதற்குத் தேவையான டிலே சமிக்கை உபகரணங்கள் தருவித்தற் கட்டளை நடைபெறுகிறது.

**புகையிரத நிலையங்களை மறுசீரமைத்தல்**

தனியார் பிரிவுகளின் பங்களிப்புடன் கண்டி, மாத்தறை புகையிரத நிலையங்களை செய்வதற்கு நடவடிக்கை புகையிரத நிலையத்தின் நிறைவடைந்துள்ளது.



பூனானை புகையரத நிலையத்தை புதிதாக அமைத்ததுடன், கெலிஓய, பிலிமதலாவ, மீகம்மன, பள்ளதலவின்ன, யடிவெல்தெனிய புகையிரத நிலையங்களை மறுசீரமைப்புச் செய்தல்.



புதிதாக அமைக்கப்பட்ட பூனானை புகையிர நிலையம்.



கெலிஓய புகையிரத நிலையத்தை மறுசீரமைப்பு செய்ததன் பின்பு தோன்றும் விதம்.

கிழக்கின் உதயத்தின் கீழ் கன்தலாவ, வன்தாரமூலை, அசேலபுர, ரிதிதென்ன ஆகிய புதிய புகையிரத தரிப்பிடங்கள் மறுசீரமைக்கப்பட்டு சேவைக்காக திறந்து வைக்கப்பட்டது.







## வணிக விற்பனை செயற்சாதனைகள்

மதிப்பீட்டு வருமானமும் செலவும்- கிடைக்கும் வருமானமும் செலவும்

| காரணம் | ஆரம்ப மதிப்பீடு (ரூ.மி) | கிடைத்த வருமானம/செலவு(ரூ.மி) |
|---|---|---|
| **வருமானம்** | | |
| பயணிகள் போக்குவரத்து | 2,415 | 2,723.24 |
| பொருட்கள் | 561 | 470.23 |
| ஏனைய | 280 | 477.66 |
| **செலவு** | | |
| மீள்வரல் | 8,404.6 | 8,224.1 |
| முதலீடு | 16,964.2 | 9,717.1 |

#### கட்டண திருத்தங்கள்

2008 ஜூன் 01 ம் திகதியிலிருந்து புகையிரத பயணிகள் கட்டணங்களிள் திருத்தகள் 70% ஆல் உயர்த்தப்பட்டது. இந்த திருத்தங்கள் வலயங்கள் அடிப்படையில் குறைந்த கட்டணம் 1 ம் வகுப்புக்கு ரூ.40 உம், 2 ம் வகுப்புக்கு ரூ. 20 உம், 3 ம் வகுப்புக்கு ரூ. 10 ஆகும். புகையிரத பருவச்சீட்டுக்களுக்கு கட்டணத்தை தீர்மாணிக்கும் போது சாதாரண கட்டணத்தில் 60% கழிவையும், தனியார் துறையினருக்கு 85% கழிவையும், அரச ஊழியர்களுக்காகவும் புகையரத ஊழியர்களுக்காகவும் 95% கழிவும், பாடசாலை, பல்கலைகழக மாணவர்களுக்காக 90% கழிவும் வழங்கப்பட்டுள்ளது.

டீசல்/பெற்றல் எரிபொருளின் விலைகள் குறைவடைந்ததனால் அதற்கு சமமாக கட்டணங்களிள் திருத்தங்கள் 2008 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. அதன்படி கட்டணங்களிள் சிறு குறைவு ஏற்பட்டுள்ளது. எப்படியாகினும் 2007 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2008 ம்ஆண்டில் வருமானமத்தில் அதிகரிப்பை காணலாம். கட்டண திருத்தத்துடன் 2007 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2008 ம் ஆண்டில் அதன் அதிகரிப்பு 35% சத வீதமாகும்.

#### பொருட்கள் போக்குவரத்து

பொருட்கள் போக்குவரத்து தொடர்பாக தற்பொழுது நடைமுறையிலிருக்கும் கட்டணங்கள் போதுமானதற்றதால் தற்காலத்துக்குப் பொருத்தமான படி கட்டணத் திருத்தம் 2007 ம் ஆண்டு நவம்பர் 01 ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. புதிய கட்டண திருத்தத்திற்கமைய பொருட்கள் வருமானம் தொன், தொன் கி.மீ. அளவு கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

| | 2007 | 2008 |
|---|---|---|
| பொருட்கள் வருமானம்(மில்லியன்) | 314.1 | 363.4 |
| பொருட்கள் தொன் (மில்லியன்) | 1.70 | 1.69 |
| தொன்கள் கி.மீ. | 133.21 | 120.66 |

மேலுள்ள அட்டவணைப்படி வருமானம் 2007 உடன் ஒப்பிடுகையில் 2008 ம் ஆண்டில் 15% சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இருந்தும் பொருட்களின் தொன், தொன் கி.மீ. அளவில் குறைவைக் காண முடியும். பிரதானமாக கொழும்பு கோட்டையலிருந்து மாத்தறை வரையிலான எரிபொருள் சேவை காலி வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டமை, கட்டணம் 50% ஆல் அதிகரித்தமையினால் மாற்று வழிகளை தெரிவு செய்து தனியார் லொறிகள், கொள்கலங்களிள் பொருட்களை கொண்டு சென்றமை தொன்களின் அளவு குறைவடைவதற்கு பிரதான தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன்படி 2007 ஆண்டுடன் ஒப்பிடுகையில் விவசாய உற்பத்தி தொன்களின் அளவு 4% – 3% வரை குறைவடைந்தமையும், தொன் கி.மீ. 17% - 14% வரையிலான குறைவையும் காண முடியும்.

எப்படி இருந்தும் இவ்வருடத்தினுள் பொருட்களின் போக்குவரத்து குறைவடைந்தமை தொடர்பாக நோக்குகையில் புகையிரத்தில் போக்குவரத்துச் செய்கையில் ஏற்றி இறக்குகையில் நேரம் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளாள் புகையிரதத்திற்கு பதிலாக மாற்று போக்குவரத்து முறைகள் பின்பற்றப்படுகிறது. மேலும் பொருட்கள் போக்குவரத்து கட்டண திருத்தங்கள் பிரதான தாக்கத்தை ஏற்படுத்தியது. பெட்டி, என்ஜின்களிள் போதாமையும் பிரச்சினையாகும்.

## கொள்வனவு செய்தல்

#### ஆரம்பிக்கப்பட்டிருக்கும் திட்டங்களும், கேள்விப்பத்திர நடவடிக்கைகளும்

புகையிரத என்ஜின்கள் 15 ஐ கொள்வனவு செய்தல்- ( ரூ.மி. 3000)
2010 ம் ஆண்டில் கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருமுகப்படுத்திய மின் சமிக்கை கட்டமைப்பை நவீனமாக்குதல்.
2010 ம் ஆண்டில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வானொலி தொலைத்தொடர்பு வலையமைப்பை அமைத்தல்-(ரூ.மி.700)
2010 ம் ஆண்டில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சபுகஸ்கன்த திட்டம்.

ஆரம்ப ஆய்வு நடவடிக்கை நடபெற்றதுடன் நிர்மானப்பணிகளை 2010 ம் ஆண்டில் ஆரம்பிக்க உள்ளது.

வட நன்பர்கள்-யாழ்பான பாதையை மீண்டும் அமைத்தல்.

ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பித்து தாண்டிக்குளம் வரை பாதை அமைப்பு நிறைவடைந்துள்ளது.

**புகையிரத பாதுகாப்பு படையின் வருடாந்த பணிகள்**

| | செயற்படுத்திய செயள்கள் | 2008 |
|---|---|---|
| 01 | புகையிரத சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட எண்ணிக்கை | 1830 |
| 02 | பு .சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட தண்டப்பணங்கள் | ரூ.1105150.50 |
| 03 | பு .சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 17 |
| 04 | பு .சட்டத்தின் கீழ் நீதிமன்ற தண்டப்பணங்கள் | ரூ. 21310.00 |
| 05 | குற்றவியல் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவை | 62 |
| 06 | குற்றவியல் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் | ரூ. 22900.00 |
| 07 | அறிவிக்கப்பட்டிருக்கும் சட்டவிரோத நிர்மானங்களின் எண்ணிக்கை | 323 |
| | 1. அகற்றப்பட்ட சட்டவிரோத நிர்மானங்கன் எண்ணிக்கை | 85 |
| | 11. சட்ட நடவடிக்கைகளுக்காக பி.பொ.(பாதை,வேலை) | 139 |
| 08 | பல விடயங்களின் கீழ் திறக்கப்பட்ட கோவைகள் | 938 |
| 09 | நிறைவு செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | 319 |
| 10 | சேதங்களை அறவீடு செய்தல், நிலுவைகளை அறவீடு செய்தல் | ரூ.36606.00 |

## புகையிரத உரிமையைப் பாதுகாத்தல்

புராதன பொருட்களை பாதுகாப்பதற்காக நீண்ட காலங்களாக பிரயோகமாக பயன்படுத்தப்படாமலிருந்த புகையிரத நூதனசாலையை அமைப்பதற்கு நடவடிக்கை செய்தல்.



தேசிய புகையிரத நூதனசாலையின் நிர்மானப்பணிகள் துரிதமாக நடைபெறும் மாதிரி

100 வருடங்களை பூர்த்தி செய்த தெமட்டகொட புகையிரத மடுவவத்தை தேசிய உரிமையாக பிரகடணப்படுத்தி பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

பல இடங்களில் இருக்கும் புகையிரம் சம்மந்நதமான வரலாற்றுப்பொருட்களின் தகவல்களையும், நிழற்படங்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## தனியார் பிரிவுகளின் பங்களிப்பு

சமுதாய பொறுப்பு எண்ணக்கருவின் கீழ் புகையிரத நிலையங்களின் அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்ட புகையரத நிலையங்கள் சிலவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் (கண்டி, கம்பகா)

வெளியிடப்பட்ட தகவல் தனி வலையமைப்பொன்றை அமைப்பதற்காக கருத்தரங்கு உடன்பாடுகளில் ஈடுபடல்.

## ஊழலையும், வீண்விரயத்தையும் ஒழித்தல்

ஊழல், வீண்விரயம், தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கும் வசதிகளை சகல ஊழியர்களுக்கும் திறந்து கொடுத்தல்.

ஊழல், வீண்விரயங்கள், வினைத்திறனின்மைகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்க நடவடிக்கைகள் எடுத்தல்.

புகையிரத சொத்துக்களை தகாத முறையில் உபயோகித்தலுக்கு கடுமையான சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

எரிபொருள் பாவனை வினைத்திறனை உயரத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல். (2007 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2008 ம் ஆண்டில் டீசல் லீற்றர் 1,100,000 மீதத்தை காணமுடியும்.)

ஆலோசனைகளை மிகவும் பயனுள்ளதாற்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

பெறுபேற்றட்டை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான கலந்துலையாடல்களிள் இறங்குதல்.

அலுவலர்கள், வெளி நபர்களுக்கு நிர்வாகமின்றி வழங்கப்பட்டிருந்த இலவச புகையிரத பிரயான அட்டைகளை உண்மைநிலை வழிமுறைக்கு கொண்டு வரல்.

## புகையிரத சேவையின் உயர்வுக்குள்ள தடைகளும் எல்லைகளும்

- நிருவாகப் பிரச்சினைகள்.
- ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு வழங்குவதிலுள்ள எல்லைகள்.
- தீர்மானம் எடுப்பதில் முகாமைக்குள்ள எல்லைகள்.

  ஊ+ம். ஒழுக்கம், தாபன வெற்றிடங்களை நிரப்புவதில் ஏற்படும் எல்லைகள்.
- சொத்துக்களை பராமரிப்பதற்காக உரிய முதலீடுகள் கிடைக்காமை.
- திணைக்கள சொத்துக்கள் வீழ்ச்சியடைதல்.
- நிபுனத்துவ அறிவு பற்றாக்குறை.
- புகையிரத காணிகளிள் அத்துமீறி குடியேறல்.

புகையிரத சேவையின் உயர்வுக்குள்ள தடைகளும் எல்லைகளும் மேலேயுள்ளவாறு காட்ட முடியும். திணைக்களம் பின்பற்றுகின்ற நிதி கொள்கை ஒரு நடவடிக்கையாகும். 2008 ஜூன் மாதத்தில் ஏற்படுத்திய பயணிகள் கட்டண திருத்தத்தாலும், 2007 ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்படுத்திய பொருட்கள் போக்குவரத்து திருத்தத்தால் சிறியளவு பயணிகள், பொருட்கள் வருமானம் அதிகரிதுள்ளது. அடுத்த நடவடிக்கை நிலையற்ற செலவை குறைப்பதாகும். வருமானத்தை அதிகரித்து நிலையற்ற செலவை குறைப்பதனினால் 2008 ம் ஆண்டில் செலவு ரூ.மி. 4553.2 ஆகும்.

எப்படியாகினும் இந்நாட்டு பொருளாதார அபிவிருத்தியை துரிதமாக்க வேண்டிய காலகட்டத்தில் புகையிரத திணைக்களத்திற்காக அதிக செலவை திறைசேரியால் ஏற்க்க நேர்ந்தது. நிதித்துறையில் ஏற்படும் சுமையை முறையாக குறைப்பதற்கு அதாவது நிலையற்ற செலவை நிவர்த்தி செய்வதற்கு போதியளவானதும், இரண்டாவதாக நிலையான செலவுடன் மீள்வரல் செலவை குறைத்துக்கொள்ளக் கூடிய வருமானத்தை நோக்காகக் கொண்டு திட்டங்கள் தீட்டுவதை துரிதமாக்க வேண்டும்.

## முன் திட்டங்கள்

- ஊள்ளுர் கொள்கலன் முற்றம் ஒன்றை அமைத்தல்.

  உறுதியான அமைப்பு வியூகம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். இதற்காக மந்திரி சபை தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்க உள்ளது.

- காணிகளை ஆய்வு செய்தல்.

- பாகிஸ்தானிடமிருந்து எரிபொருள் தாங்கிகளை கொள்வனவு செய்தல்.

  உலக சந்தையில் இரும்பு, உருக்குகளின் விலைகள் கூடிக்குறைவடைவதனால் வழங்க கூடிய டாங்கிகளின் எண்ணிக்கை தொடர்பாக வழங்குனருடன் கலந்துரையாடி இறுதியில் மீண்டும் 15 அலகுகளை பெற்றுத்தருவதற்கு முடிவானது. மேலும் வழங்குநருடன் கலந்துலையாடல் நடைபெறுகிறது.

- புகையிரத என்ஜின் 15 ஐ கொள்வனவு செய்தல்.

  விலை மதிப்பீடு கிடைத்ததன் பின் அதை விலை மதிப்பீட்டு குளுவினாலும், கேள்விப்பத்தரம் கோரல் குளுவினாலும் மதிப்பீடு செய்தல் தொடர்ந்து நடைபெறுகிறது. மலைநாடு புகையிரதத்தை உயர்த்துவது பிரதானமான நோக்கமாகும்.

- கரையோர புகையிரத பாதை அபிவிருத்தித் திட்டம்.

- கிழக்கு புகையிரத பாதையை புனர்நிர்மானம் செய்தல்.

  2008 நவம்பர் மாதத்தில் திட்ட ஆலோசனையை மதிப்பீட்டுக் குளுவினால் ஆராயப்பட்டது.